**தலைப்பு 289 - ஏற்றுமதி விவசாய திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 289 - ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 22 ஆம் திகதி பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 992.77 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 966.12 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 26.65 மில்லியன் அதாவது 2.68 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 564.67 | 549.55 | 15.12 | 2.67 |
| மூலதனம் | 428.10 | 416.57 | 11.53 | 2.69 |
| மொத்தம் | 992.77 | 966.12 | 26.65 | 2.68 |

## 2.2 முற்பணக் கணக்கு

### அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 28901 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 29.76 | 29.07 | 23.76 | 34.35 | 110.10 | 77.83 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0087/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 13.32 மில்லியன் ஆகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் கீழ் வருகின்ற 05 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3.18 மில்லியன் ஆகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0002/0057/000 | 0.23 |
| 6000/0000/00/0015/0144/000 | 1.12 |
| 6000/0000/00/0013/0042/000 | 0.03 |
| 6000/0000/00/0016/0012/000 | 1.56 |
| 6000/0000/00/0018/0014/000 | 0.24 |
| மொத்தம் | 3.18 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்படாமை

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற நிலையான சொத்துப் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. ஏனைய பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றிக்கை |
| (ii) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (iii) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (iv) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (v) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

### 3.2 பொது வைப்புக் கணக்கு

02 வருடங்களை விஞ்சிய ரூபா 390,785 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான கூற்று

28901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக முற்பணக் கணக்குகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அத்திகதியில் பல்வேறு காரணங்கள் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்படாத 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 624,596 ஆக இருந்ததுடன் அந்தக் கடன் மீதிகள் 02 வருடங்கள் முதல் 14 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்தக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்ட பிரகாரம் சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைந்த பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|
| (i) | காணி (ஹெக்டேயர்) | 9.3 | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) | மோட்டார் வாகனங்கள் | 02 | 06 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரை |

(ஆ) வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பன்படுத்துதல்

உதவி பணிப்பாளர் அலுவலகத்தை உள்ளடக்கிய திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகள் தாபிக்கப்பட்டுள்ள மாத்தளை, வாரியபொல தோட்டத்தில் 30 ஏக்கர் அளவான காணியின் உரித்து காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக இருந்ததுடன் அந்தக் காணிகள் கணக்காய்வுத் திகதியான 2016 செப்தெம்பர் 07 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்தால் முறையாகக் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 வெளிநாட்டுதவி செயற்திட்டம்**

**சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டமை.**

2009 ஆம் ஆண்டின் கொரிய அரசாங்கத்தின் (COICA) நட்புறவுச் சங்கத்தின் மூலம் வழங்கப்பட்ட நிதியுதவியைப் பயன்படுத்தி 2009 நவம்பர் 16 ஆந் திகதி வரையிலும் விவசாய உற்பத்தி பொதியிடல் செயற்திட்டத்திற்காக கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு தேவையான இயந்திர உபகரணங்களை வழங்கி பொருத்தப்பட்டிருந்த போதிலும், 2016 செப்தெம்பர் 07 ஆந் திகதி - வரையிலும் அந்தக் கட்டிடமும் இயந்திர உபகரணங்களும் எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

**3.6 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 85 | 49 | 36 |
| (ii) | மூன்றாம் நிலை | 28 | 08 | 20 |
| (iii) | இரண்டாம் நிலை | 800 | 615 | 185 |
| (iv) | ஆரம்ப நிலை | 484 | 426 | 58 |
| | மொத்தம் | 1,397 | 1,098 | 299 |